# 2014-15 NEWSPAPER CUTTINGS



## தென்னிந்திய கவுன்சிலோடு மகளிர் கல்லூரி ஒப்பந்தம்

விழுப்புரம், ஜூன் 1-

விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் இந்திய செலவு கணக்காளர்கள் நிலையத்தின் தென்னிந்திய பிராந்திய கவுன்சில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடும் நிகழ்வு நடந்தது.

இந்த ஒப்பந்தம் மூலம் மகளிர் கல்லூரி தென்னிந்திய பிராந்திய கவுன்சில் மூலம் அங்கீகரித்த வாய்மொழி பயிற்சி பெறுவதோடு, இங்கு தேர்வில் வெல்லும் மாணவிகள் அரசு அங்கீகாரம் பெற்ற செலவு கணக்காளராகும் வாய்ப்புகள் உள்ளது.

உற்பத்தி மற்றும் சேவை நிறுவனத்திலும் வேலை வாய்ப்பு வழங்கப்படுகிறது. ஒப்பந்தத்தில் கல்லூரி செயலாளர் செந்தில்குமார், கவுன்சில் தலைவர் ராஜூஅய்யர் கையெழுத்திட்டனர். கல்லூரி இயக்குனர் கஸ்துாரிபாய் தனசேகரன், வணிகவியல் துறை தலைவர் செல்வக்குமார், டாக்டர் அருணா குமாரி உடனிருந்தார்.



விழுப்புரம் தெய்வானை அம்மாள் கல்லூரியில் இந்திய செலவு கணக்காளர்கள் நிலையத்தின் தென்னிந்திய பிராந்திய கவுன்சில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

தினமலர் 1.06.2014



### தென்னிந்திய கவுன்சிலுடன்

## தெய்வானை அம்மாள் கல்லூரி புரிந்துணர்வு ஒப்பந்தம்



விழுப்புரம் தெய்வானை அம்மாள் கல்லூரியில், இந்திய செலவு கணக்காளர்கள் நிலையத்தின் தென்னிந்திய பிராந்திய கவுன்சிலுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திடும் நிகழ்ச்சி நடந்தது.

விழுப்புரம், ஜூன் 2: விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் இந்திய செலவு கணக்காளர்கள் (எஸ்ஐ ஆர்சி, ஐசிஏஐ) நிலையத்தின் தென்னிந்திய பிராந்திய கவுன்சிலுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திடும் நிகழ்ச்சி நடந்தது.

வணிகவியல் துறை தலைவர் செல்வக்குமார் வரவேற்றார். கவுன்சிலின் தலைவர் ராஜீ அய்யர் மற்றும் கல்லூரி செயலாளர் செந்தில்குமார் ஆகியோர் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். இந்நிகழ்ச்சியானது இக்கல்லூரி வரலாற்றில் ஒரு மைல் கல் என கல்லூரி இயக்குனர் கஸ்தூரிபாய் தனசேகரன் குறிப்பிட்டார்.

கல்லூரி செயலாளர் செந்தில் குமார் பேசும்போது, கணக்காளர்கள் ஒரு நிறுவனத்தின் மூளை போன்றவர்கள் என கூறி, கணக்காளர்களின் முக்கியத்துவம் குறித்து பேசினார்.

எஸ்ஐஆர்சி, ஐசிஏஐ தலைவர் ராஜீ அய்யர் பேசும்போது, இளைய சமுதாயத்துக்கு வாய்ப்புகள் பிரகாசமாக உள்ளது என குறிப்பிட்டார்.

முன்னதாக வணிகவியல் துறை தலைவர் டாக்டர் செல்வக்குமார் வரவேற்றார். வணிக மேலாண்மை துறை தலைவர் அருணாகுமாரி நன்றி கூறினார்.

தினகரன் 2.06.2014

# தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் உலகத் தரத்திற்கு இணையான உயர்கல்வி

தமிழ் நாட்டின் மிகவும் பின்தங்கிய மாவட்டமாக கருத்தப்படும் விழுப்புரத்தில், பெண்கள் கல்வியில் சிறந்து, பயன் பெற தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரி 1989ம் ஆண்டு துவக்கப்பட்டது.

உலகத்தரம் வாய்ந்த கல்வி மூலம் தலைமை பண்புடன் மாணவிகளை உருவாக்க செயல்பட்டு வருகின்றனர் நிறுவனர் சாமிக்கண்ணு, செயலர் செந்தில்குமார்.

முதல் தலைமுறை பட்டதாரி மாணவியர், பொருளாதாரத்தில் பின்தங்கிய வறுமை நிலையில் உள்ள மாணவியர், தமிழ் வழிக் கல்வி படித்த மாணவியர், கல்வி கற்க இயலாத விவசாய கிராமப்புற மாணவியர் என பலர் இக்கல்லூரியில் படித்து வருகின்றனர்.



சாமிக்கண்ணு

இவர்கள் அனைவருக்கும் ஏற்ற முழு கல்வியை அளிப்பதில் இக்கல்லூரி கவனம் செலுத்தி வருகிறது.

**கல்வித் தரத்தை உயர்த்துதல்**

கல்வி, விவசாயம், தொழில் நிறுவனங்கள் ஆகிய துறைகளைக் சார்ந்த வல்லுனர்களைக் கொண்டு காலத்திற்கேற்ற பாடத் திட்டத்தை வடிவமைத்து செயல்படுத்தப்படுகிறது. தகுதி வாய்ந்த பேராசியர்களைக் கொண்டு கற்பிக்கப்படுகின்றன. ஒளி, ஒலி கருவிகளை பயன்படுத்தி பாடம் நடத்துகின்றனர்.

கருத்தரங்குளை நிகழ்த்துதல், தொழில் நிறுவனங்களை நேரில் கண்டு பார்வையிடல், கோடைக் கால கல்விப் பயிற்சியளித்தல், இதழரங்கம் நடத்துதல், துறை சார்ந்த பேரவைகள் தொடங்கி மாணவியரின் தனித் திறமைகளை வளர்த்தல், மாணவியருக்குப் பாடத்தோடு, சுயதொழில்பயிற்சி, மதிப்பீட்டுக்கல்வி, சேவைக்கல்வி ஆகியன வழங்கப்படுகின்றன.

இக்கல்லூரியில் முன்னாள் மாணவியர் பல சாதனைகளைச் செய்துள்ளனர். மென்பொருள் மையங்கள், தொழில் நிறுவனங்கள், வங்கிகள், காப்பீட்டு மையங்கள் மற்றும் கல்விசார் நிறுவனங்கள் ஆகிய இடங்களில் வேலை வாய்ப்புகளைப் பெற்று வருகின்றனர்.

**கூட்டு செயல்பாடுகள்**

சிங்கப்பூரில் தேசிய பல்கலைக் கழகம் மற்றும் ஹாங்காங்கின் லிங்னான் பல்கலைக்கழகம் ஆகியவற்றுடன் இணைந்து கல்விப் பணியாற்றுகிறது.

சிங்கப்பூரின் கல்வித் துறை அமைச்சகம் அனுப்பிய தமிழாசியர்களுடன் கலந்துரையாடல் செய்யப்பட்டது.

**கல்லூரியின் எதிர்கால நோக்கு**

திறன் மிக்க பெண்களை உருவாக்கி சிறப்பான சேவை புரிந்து வரும் இம்மகளிர் கல்லூரி வெற்றிகரமாக 25ம் ஆண்டு வெள்ளிவிழாவை நோக்கியுள்ளது.

அனைத்துச் சாதனைகளுக்கும் சிகரம் வைத்தார் போன்று தெய்வானை அம்மாள் மகளிர் நிகர்நிலை பல்கலைக்கழக அந்தஸ்திற்கு தன்மை உயர்த்தும் வெற்றி பயணத்தை மேற்கொண்டு வருகிறது.

14 . June . 2014

தினமலர்



விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் பேராசிரியர்களுக்கான புத்தாக்க பயிற்சி முகாம் நடந்தது.

## பேராசிரியர்களுக்கு புத்தாக்க பயிற்சிகள்

விழுப்புரம், ஜூலை 13-

விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் பேராசிரியர்களுக்கான புத்தாக்க பயிற்சி முகாம் நடந்தது.

இயக்குனர் கஸ்துாரி பாய் தனசேகரன் தலைமை தாங்கினார். வணிக மேலாண்மை துறை தலைவர் அருணாகுமாரி முன்னிலை வகித்தார். திருச்சி செயின்ட் ஜோசப் கல்லுாரி புல முதன்மையர் அலெக்சாண்டர் பிரவின்துரை , உதவி பேராசிரியர் ஆல்பர்ட் செசில்ராஜ் சிறப்புரையாற்றினர்.

பேராசிரியர்களுக்கான குழு கலந்தாய்வு நடந்தது. கணினி பயன்பாட்டியல் துறை தலைவர் ஏஞ்சலின் கிறிஸ்டோபர் நன்றி கூறினார்.

தினமலர்
13.07.2014

## "Education holds the key to women empowerment"

Special Correspondent




*K. Anbarasu, Principal, National College, Tiruchi, with the newly inaugurated Student Council members at Theivanai Ammal College in Villupuram.*

**VILLUPURAM:** Education will empower women to fulfil their aspirations and enable them to act as agents of societal change. Those women who set clear-cut goals and pursue them with single mindedness are bound to excel in life, said K. Anbarasu, Principal, National College, Tiruchi.

He was delivering a speech at the inauguration of the Student Council of Theivanai Ammal College for Women here.

Mr. Anbarasu said that educational institutions were being started for various reasons: to promote higher education and to encourage research activity and innovation.

However, institutions such as Theivanai Ammal College were established for empowering women through imparting education. It was rarely that the women in the rural areas with pastoral background and belonging to the downtrodden sections of the society got to pursue higher education as in Villupuram.

Mr. Anbarasu called upon the students to utilise the opportunity provided by the college to their advantage and also avail of the financial assistance provided by the University Grants Commission and the Department of Science and Technology through various schemes exclusively meant for women, as it could lessen the burden on their families.

He underscored the point that women should not be hamstrung by the notion of gender discrimination.

They should begin to feel that in mental make-up and determination they were in no way inferior to men.

Good habits, compassion and honesty must grow along with intellect.

However, Mr. Anbarasu pointed out that with the disappearance of the joint family system and the cropping up of the nuclear family system the compassionate nature seemed to be on the wane.

In such a context every individual had cut out a role for herself to usher into a better society.

Hard work was the key to success as was proved in the case of Bill Gates and steel magnate Mittal.

He called upon the students to learn a lesson of team work from the intercontinental migratory birds that chose to fly thousands of kilometres in "V" formation and take turns at leading the flock.

They should also show concern for environment so as to leave the earth an inhabitable place for the posterity, Mr. Anbarasu added.

College Secretary S. Senthil Kumar, Director Kasthuri Bai Dhanasekaran, Student Council chairperson M. Prasanthi and secretaries of various clubs participated.

THE HINDU

**Disclaimer:** Readers are requested to verify & make appropriate enquiries to satisfy themselves about the veracity of an advertisement before responding to any published in this newspaper. Kasturi & Sons Limited, the Publisher & Owner of this newspaper, does not vouch for the authenticity of any advertisement or advertiser or for any of the advertiser's products and/or services. In no event can the Owner, Publisher, Printer, Editor, Director/s, Employees of this newspaper/company be held responsible/liable in any manner whatsoever for any claims and/or damages for advertisements in this newspaper.

THE HINDU.
14. July. 2014

## கல்லூரியில் மாணவர் பேரவைத் தொடக்கம்




கல்லூரியில் மாணவர் பேரவையினை தொடங்கி வைத்து பேசுகிறார் திருச்சி நேஷனல் கல்லூரி முதல்வர் கே.அன்பரசு.

விழுப்புரம், ஜூலை 12: விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் மாணவர் பேரவைத் தொடக்க விழா வியாழக்கிழமை நடைபெற்றது.

பொருளாதாரத் துறைப் பிரிவு தலைவர் சாந்தி வரவேற்றார். கல்லூரி இயக்குநர் கஸ்தூரிபாய் தனசேகரன் தொடங்கி வைத்தார். செயலர் செந்தில்குமார் முன்னிலை வகித்தார். திருச்சி நேஷனல் கல்லூரியின் முதல்வர் கே.அன்பரசு மாணவர் பேரவையைத் தொடங்கி வைத்தார். மாணவர் பேரவையின் திட்டப் பணிகள் குறித்து மாணவிகள் அறிக்கை வாசித்தனர்.

இந்நிகழ்ச்சியில் மாணவிகள், பேராசிரியர்கள் பலர் கலந்து கொண்டனர்.

தினமணி
13.7.2014

## தெய்வானை அம்மாள் கல்லூரியில் மாணவியர் பேரவை தொடக்கம்

விழுப்புரம், ஜூலை 14: விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரி கலையரங்கில், மாணவியர் பேரவை தொடக்க விழா நடந்தது. பேரவைத் தலைவி பிரசாந்தி வரவேற்றார்.

கல்லூரி இயக்குனர் கஸ்தூரிபாய் தனசேகரன் தேசத்தலைவர்கள் வாழ்க்கையில் உண்மையை கடைபிடித்து வெற்றி கண்டது போல் இக்கல்லூரி மாணவிகள் உண்மையை கடைபிடித்து வெற்றி பெற வேண்டும் என பேசினார்.

இதில் கணிதத்துறை மாணவி பிரசாந்தி, ஆங்கிலத்துறை மாணவி பிரசில்லா, நுண்கலை பேரவைசெயலர் பிரித்திகா, விளையாட்டுத்துறை தலைவி இலக்கியா, விடுதி செயலர் அபிநயா ஆகியோர் கல்லூரி விடுதியின் 2014–15ம் ஆண்டிற்கான செயல் திட்டங்களை வாசித்தனர்.

சிறப்பு விருந்தினராக திருச்சி தேசிய கல்லூரி முதல்வர் அன்பரசு கலந்து கொண்டு பேசினார். மாணவியர் பேரவை துணைத் தலைவி ராபியா பேகம் நன்றி கூறினார்.




▶ விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் மாணவியர் பேரவை தொடக்க விழா நடந்தது.

தினகரன்
14.07.2014




தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில்

## மாணவியர் பேரவை தொடக்க விழா

விழுப்புரம், ஜூலை.14– விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் மாணவியர் பேரவை தொடக்க விழா கல்லூரி இயக்குனர் டாக்டர் கஸ்தூரி பாய் தனசேகரன் தலைமையில் நடைபெற்றது. பேரவை தலைவர் பிரசாந்தி வரவேற்றார். திருச்சி தேசிய கல்லூரி முதல்வர் அன்பரசு சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு பேரவையை தொடங்கி வைத்தார். அப்போது, அவர் பேசுகையில், அறிவுடன் கலந்து மனித நேயத்தை மாணவர்கள் வளர்த்துக் கொண்டு சமூகத்திற்கு உதவிட வேண்டும். விவேகானந்தரின் பொன் மொழிகளை வாழ்க்கையில் கடை பிடித்து நடக்க வேண்டும். எந்த ஒரு நிகழ்வாக இருந்தாலும் இலக்கை உறுதிசெய்து அதற்காக உண்மையாக கடுமையாக உழைத்தால் நிச்சயம் வெற்றி பெறலாம். எந்த ஒரு செயலையும் பொதுவாக சேர்ந்து செய்தால் பலனை முழுமையாகவும், உறுதியாகவும் பெற்று விடலாம். என்றார். இதில் மாணவிகள், பேராசிரியர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர். மாணவியர் பேரவை துணைத்தலைவர் ராபியாபேகம் நன்றி கூறினார்.

தினத்தந்தி
14.07.2014

தினமலர் 10.07.2014

## மகளிர் கல்லூரியில் புரிந்துணர்வு ஒப்பந்தம்



விழுப்புரம், ஜூலை 10- விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் தொழிற் கல்வி புரிந்துணர்வு ஒப்பந்த நிகழ்ச்சி நடந்தது. இயக்குனர் கஸ்தூரி பாய் தனசேகரன் தலைமை தாங்கினார். கணினி துறை பேராசிரியை சத்யப்பிரியா வரவேற்றார். ...

... சாத், வணிக வளர்ச்சி மேலாளர் டாக்டர் மாதவன், புதுச்சேரி ஐசிஎடி தாளாளர் சங்கர், சாயாளிக் டெக்னாலஜீஸ் தாளாளர் சக்திவேல் ஆகியோர் தொழிற்கல்வியில் புரிந்துணர்வு ஒப்பந்தம் முக்கியத்துவம் பற்றி சிறப்புரையாற்றினர். ...

தினத்தந்தி 04.08.2014




விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் நடைபெற்ற விழாவில் திருவள்ளுவர் பல்கலைக்கழக துணைவேந்தர் குணசேகரன் கலந்து கொண்டு மாணவி ஒருவருக்கு பட்டம் வழங்கியபோது எடுத்த படம்.

தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் பட்டமளிப்பு விழா:

## ஒரு பெண் கல்வி கற்றால் குடும்பமே கற்றதற்கு சமம்

### மாணவிகளுக்கு பட்டங்களை வழங்கி பல்கலைக்கழக துணைவேந்தர் பேச்சு

விழுப்புரம், ஆக.4– ஒரு பெண் கல்வி கற்றால் குடும்பமே கற்றதற்கு சமம் என்று தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் நடந்த பட்டமளிப்பு விழாவில் மாணவிகளுக்கு பட்டங்களை வழங்கி பல்கலைக்கழக துணை வேந்தர் பேசினார்.

**பட்டமளிப்பு விழா**

விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் ... பல்கலைக்கழக துணைவேந்தர் பி. குணசேகரன் கலந்து கொண்டு 647 மாணவிகளுக்கு பட்டங்களை வழங்கி பேசினார். அப்போது அவர் பேசியதாவது:–

தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் நடைபெறும் பட்டமளிப்பு விழாவில் கலந்து கொண்டு பேசுவதற்கு கிடைத்த வாய்ப்பினை எண்ணி பெருமை அடைகிறேன். விழுப்புரம் மாவட்டத்திலேயே கிராமப்புற பெண்களின் கல்வித்தரத்தை ...

... சரிசமமாக கருதப்படுகிறார்கள். இன்றைக்கு பெண்கள் நிமிர்ந்த நன்னடை, நேர்கொண்ட பார்வை, உயர்ந்த திறமைகள், செயல் நேர்த்தி கொண்டவர்களாக உள்ளனர். ஆண்களுக்கு சமமாக அனைத்து துறைகளிலும் சவால்களை எதிர்கொண்டு சாதனை படைத்து வருகின்றனர். இந்தியாவில் பெண்கள் கற்பித்தல், மருத்துவம், அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல் ஆகிய துறைகளில் பெண்கள் முக்கிய பங்காற்றி வருகின்றனர். நாட்டில் 88 சதவீதம் பெண் அறிவியல் பட்டதாரிகளும், மருத்துவத்தில் 8 சதவீதமும், பொறியியல் தொழில் நுட்பத்தில் 3 சதவீதம் என பல துறைகளில் முன்னேறி வ...

★ தினமணி 04.08.2014

## ...னை அம்மாள் கல்லூரி பட்டமளிப்பு விழா



# Women are under-represented in science and technology: VC

A.V. Ragunathan

**VILLUPURAM:** Though efforts have been made to give women greater access to education they are still grossly under-represented in degree programmes in the science and technology sector, said P. Gunasekaran, Vice-Chancellor of Thiruvalluvar University.

He was delivering a speech at the 14th Graduation Day of Theivanai Ammal College for Women here recently. Mr. Gunasekaran said that women were poorly represented in most government departments of science and technology.

Women constituted less than 20 per cent of the faculties of research institutes and universities and less than four per cent women had become fellows in science subjects. Very few of them were in selection committees and so far there was not a single woman Bhatnagar awardee in the country.

The Vice-Chancellor noted that even in the Indian Institute of Science women's enrolment was just 14 -17 per cent and in the IITs it was only 10 per cent.

This was not because women were incapable of handling the rigours of scientific study but because of the existing social prejudices that discouraged them from taking to science. Mr Gunasekaran attributed such a state of affairs to prejudiced mindsets, the burden of family roles on women and gender biased administration.

These factors reduced the women scientists and technologists to a minority status in their work places.

Women had less access to resources such as property, finance, technology and education that were otherwise needed to support their active engagement in science, technology and innovation.

Despite such a drawback Mr. Gunasekaran struck a positive note by stating that if requisite opportunities were given to women, they could emerge as real achievers in the field of science and technology, and give necessary thrust to the growth of the country.



**GRADUATION DAY:** *Thiruvalluvar University VC P. Gunasekaran presenting a certificate to a student of Theivanai Ammal College, Villupuram*

THE HINDU
07. 08. 2014



விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் நடந்த சுதந்திர தினவிழாவில் சிறப்பு விருந்தினர் பண்ருட்டி முன்னாள் காவல்துறை கண்காணிப்பாளர் விஜயகுமார், கல்லூரி செயலர் செந்தில்குமார், தாளாளர் சாமிக்கண்ணு, தேர்வுக்கட்டுப்பாட்டாளர் நடேசன் ஆகியோர் உறுதி மொழி எடுத்து கொண்டனர்.

தினகரன்
17. 08. 2014






விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் ஆளும் குழு கூட்டம் நடந்தது.

# தெய்வானை அம்மாள் கல்லூரியில் ஆளும் குழு கூட்டம்

விழுப்புரம், ஆக. 24: விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் ஆளும் குழு கூட்டம் நடந்தது.

வணிக மேலாண்மைத்துறை தலைவர் அருணாகுமாரி வரவேற்றார். தாளாளர் சாமிக்கண்ணு, செயலர் செந்தில்குமார் அறிமுக உரையாற்றினர். இயக்குனர் கஸ்தூரிபாய் தனசேகரன், கல்லூரியின் முக்கிய நிகழ்வுகள் குறித்து பேசினார்.

ஆளும் குழு கூட்ட உறுப்பினர்களாக நிர்வாகம் சார்பில் தாளாளர் சாமிக்கண்ணு, செயலர் செந்தில், விழுப்புரம் சாந்தா மருத்துவ அறக்கட்டளை மேலாண்மை இயக்குனர் சரவணன், சாந்தா, சிவகாமி, விஜிசி உறுப்பினர் சார்பில் ஓய்வு பெற்ற பேராசிரியர் ஹர்வீன் சர்மா, மாநில அரசு உறுப்பினர் சார்பில் டாக்டர் கலா, பல்கலைக்கழகம் சார்பில் வேலூர் ஆசிலியம் கல்லூரி முதல்வர் யூஜினி பாத்திமாமேரி, கல்வியாளர்கள் சார்பில் திருச்சி பிஜஎம் டாக்டர் ஜெயகிருஷ்ணன், உத்யோக உறுப்பினர் சார்பில் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரி இயக்குனர் கஸ்தூரிபாய் தனசேகரன் மற்றும் பொறுப்பு முதல்வர் நடேசன், ஆசிரிய பிரதிநிதிகள் சார்பில் பொருளாதாரத்துறை தலைவர் சாந்தி, வணிக மேலாண்மைதுறை தலைவர் அருணாகுமாரி ஆகியோர் கலந்துகொண்டனர்.

அருணாகுமாரி நன்றி கூறினார்.

தினகரன்
24 * 08 * 2014



விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில், ஆசிரியர் தினவிழாவை குத்து விளக்கேற்றி கல்லூரி இயக்குனர் கஸ்தூரிபாய் தனசேகரன் துவக்கி வைத்தார்.

# தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் ஆசிரியர் தினவிழா

விழுப்புரம், செப். 10: விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் ஆசிரியர் தினவிழா நடந்தது. மாணவியர் குழு தலைவி பிரசாந்தி வரவேற்றார். சிறப்பு விருந்தினராக கல்லூரி தாளாளர் சாமிக்கண்ணு கலந்து கொண்டு, குத்து விளக்கேற்றி விழாவை துவக்கி வைத்து பேசினார்.

விழாவில் கலந்து கொண்ட தேர்வு கட்டுப்பாட்டு அலுவலர் நடேசன் ஆசிரியர்களின் அர்ப்பணிப்பு குறித்து விளக்கினார். கல்லூரி இயக்குனர் கஸ்தூரிபாய் தனசேகரன் சமுதாயத்தில் மாணவர்களின் வளர்ச்சியில் ஆசிரியர்களின் பங்கு குறித்து சிறப்புரையாற்றினார்.

பின்னர் மாணவிகளின் கலைநிகழ்ச்சிகள் நடந்தது. மாணவிகளின் கல்வியின் வளர்ச்சிக்கு பாடுபட்ட ஆசிரியர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது. இளங்கலை மூன்றாம் ஆண்டு வணிகத்துறை மாணவி வைஷ்ணவி நன்றி கூறினார்.

தினகரன்
10 * 09 * 2014

# Concern over neglect of basic sciences

. Ragunathan



*A section of students drawn from various colleges at a seminar on life sciences at Theivanai Ammal College for Women in Villupuram.*


...UPURAM: It is an alarming ...th that there are not many ...fessionals in basic sci... Ten years later there ...uld be only persons oper...ing computers and none ...th knowledge in basic sci...ces, said Thangam Menon, ...fessor and Head, Department of Microbiology, University of Madras. She was ...livering a speech at the ...ate-level seminar on "Re...nt advancements in life ...iences for human welfare" ...ganised by Theivanai Am...al College for Women here. ...Menon said that without ...sic sciences there was no ...pe for progress.

"Those opting for various ...e science courses need not ...ve any apprehension ...out their job prospects as ...veral avenues are open to ...em," she said.

There could not be any talk on life sciences without focusing on micro organisms. Micro organisms were the smallest and yet significant organisms that were pervading all over, including human bodies and environment. They had the amazing power to survive in extreme climatic conditions.

College Secretary S.Senthil Kumar, Director Kasthuri Bai Dhanasekaran, C.Ramalingam, Dean, School of Biosciences and Technology, VIT University, Vellore, and as many as 135 candidates drawn from 12 colleges located in the districts of Villupuram, Cuddalore, Tiruchi, Thiruvannamalai and Vellore, and the Union Territory of Puducherry participated.

THE HINDU
16 * 09 * 2014




விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் நடந்த கருத்தரங்கில் செந்தில்குமார் மாணவிக்கு பரிசு வழங்கினார்.

# தெய்வானை அம்மாள் கல்லூரியில் கருத்தரங்கு

விழுப்புரம், செப். 14: விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் உயிர் வேதியியல் துறை சார்பில், மனித நலத்தில் உயிர் அறிவியலின் தற்போதைய மேம்பாடுகள் என்ற தலைப்பில் கருத்தரங்கு நடந்தது. முனைவர் தங்கம் மேனன் கலந்துகொண்டு மருத்துவ நுண்ணுரியியல் என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார். மேலும் எத்துறையை சேர்ந்தவர்களாக இருந்தாலும், அறிவியல் துறையில் போதிய அறிவினை பெற்று இருக்க வேண்டும். பலரிடம் பொது அறிவியல் அறிவு குறித்து போதிய விழிப்புணர்வு ஏற்படவில்லை. எனவே மாணவர்கள் பொது அறிவியல் சம்பந்தமான தகவல்களை கட்டாயம் அறிந்து இருக்க வேண்டும் என்று பேசினார்.

தினகரன்
15 * 09 * 2014

## தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில்

# புதுமைகளை புகுத்துவதில் ஆர்வமூட்டும் நிகழ்ச்சி




விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் நடந்த நிகழ்ச்சியில், சிறப்பு விருந்தினரான திருவந்திபுரம், இந்திய அறிவியல் கல்வி ஆராய்ச்சி நிறுவன இயக்குனர் ராமகிருஷ்ணனுக்கு நினைவு பரிசை தாளாளர் சாமிக்கண்ணு வழங்கினார்.

விழுப்புரம், அக். 10:விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் மத்திய அரசின் குழுவால் பரிந்துரைக்கப்பட்ட முகாமில், 10ம் வகுப்பில் அதிக மதிப்பெண் பெற்ற மாணவர்களுக்கு புதுமைகளை புகுத்துத்துவதில் ஆர்வமூட்டும் நிகழ்ச்சி நடந்தது.

கல்லூரி முதல்வர் அருணாகுமாரி சிறப்பு விருந்தினர்களை அறிமுகப்படுத்தி, வரவேற்றார். செயலர் செந்தில்குமார் மாணவர்கள் அறிவியல் துறையில் வல்லுனர்களாகி, இஸ்ரோவில் ஆராய்ச்சி படிப்பினை மேற்கொள்ள வேண்டும் என்று கூறினார். தாளாளர் சாமிக்கண்ணு முகாமில் கலந்து கொண்ட 10 மாணவிகள், 10 மாணவர்களுக்கு இஎஸ். கல்விக்குழுமத்தின் சார்பில், முதலாமாண்டு கல்விக்கட்டணம் இலவசமாக அளிக்கப்படும் என்று அறிவித்தார்.

சிறப்பு விருந்தினர் திருவந்திபுரம், இந்திய அறிவியல் கல்வி ஆராய்ச்சி நிறுவன இயக்குனர் ராமகிருஷ்ணன் கலந்து கொண்டு, அறிவியல் துறையை மேம்படுத்த வேண்டும். எதையும் திட்டமிட்டு செயல்படுத்தினால் சிறப்பான வெற்றியை அடைய முடியும் என பேசினார். டாக்டர் லட்சுமணன் இயற்பியல் அறிஞரின் பார்வையில் உலகம் என்ற தலைப்பில் பவர் பாயிண்ட் மூலம் உரை நிகழ்த்தினார்.

தினகரன்

2 * 10 * 2014



விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் நடந்த தமிழ் கவிதை உரையரங்கத்தில் சிறப்பு விருந்தினர் ராதாகிருஷ்ணனுக்கு கல்லூரி செயலர் செந்தில் குமார் நினைவு பரிசு வழங்கினார். அருகில் தாளாளர் சாமிக்கண்ணு.

## விழுப்புரம்

# தெய்வானை அம்மாள் கல்லூரியில் தமிழ் கவிதை உரையரங்கம்

விழுப்புரம், அக். 17-

விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரி மற்றும் சாகித்ய அகாடமி சார்பில் கல்லூரி வளாகத்தில் பண்முக நோக்கில் தமிழ்க் கவிதை உரையரங்கம் நடந்தது. சென்னை, சாகித்ய அகாடமி(பொ) அலுவலர் இளங்கோவன் வரவேற்றார். தமிழ் ஆலோசனைக்குழு ஒருங்கிணைப்பாளர் நாச்சிமுத்து உரையாற்றினார். கல்லூரி தாளாளர் சாமிக்கண்ணு வாழ்த்துரை வழங்கினார். செயலர் செந்தில்குமார், இயக்குனர் கஸ்தூரிபாய் தனசேகரன் சிறப்புரையாற்றினார்.


சிறப்பு அழைப்பாளராக காவல்துறை கூடுதல் தலைமை இயக்குனர் (பணிநிறைவு) ராதாகிருஷ்ணன் கலந்து கொண்டு கற்பனை, சமூகநிலை, காலதேச வர்த்தமானங்கள் இல்லாமல் எந்த இலக்கியமும் தோன்றாது என பேசினார்.

கல்லூரி தாளாளர், செயலர், இயக்குனர், துறைத்தலைவர் ஆகியோருக்கு அகாடமி சார்பில் நினைவு பரிசு வழங்கப்பட்டது. சாகித்ய அகாடமி செயற்குழு உறுப்பினர் சம்பத் நன்றி கூறினார்.

பின்னர் மாலை நடந்த நிறைவு விழாவில் ராமகுருநாதன் பன்முகநோக்கில் தமிழ்க்கவிதைகள் உரையரங்கம் குறித்து விளக்கினார். தமிழ்துறைத்தலைவர் மங்கையர்கரசி நன்றி கூறினார்.

தமிழ் முரசு

17 * 10 * 2014



விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் தேசிய ஒற்றுமை தினம் அணிவகுப்பு நடந்தது.

## தெய்வானை அம்மாள் கல்லூரியில் தேசிய ஒற்றுமை தினம்

விழுப்புரம், நவ. 2: விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் தேசிய ஒற்றுமை தினம் கடைப்பிடிக்கப் பட்டது.

இந்திய அரசின் வேண்டுகோளுக்கு இணங்க முன்னாள் உள்துறை அமைச்சர் சர்தார் வல்லபாய் பட்டேல் நினைவுநாள் தேசிய ஒற்றுமை தினமாக கடைப்பிடிக்கப்படுகிறது. இவ் விழாவில் தேசிய மாணவர் படையின் ஹவால்தார் பாஸ்கர் கலந்து கொண்டார்.

இவரது முன்னிலையில் தமிழ்நாடு 6ம் பட்டாலியன் என்சிசி சினியர் விங்ஸ் கம்பெனி எண்–3ஐ சேர்ந்த தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரி மாணவிகள் தேசிய ஒற்றுமை தின உறுதிமொழி எடுத்துக் கொண்டனர். பின்னர் தேசிய மாணவர் படையின் அணிவகுப்பு நடந்தது.

தேசிய மாணவர் படையின் ஹவால்தார் பாஸ்கர் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டார்.

தினகரன்
2 * 11 * 14

## கல்லூரி மாணவிக்கு விருது



விழுப்புரம், நவ.18–

விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் தேசிய மாணவர் படை–பொறுப்பாளராக பிரியா உள்ளார். இவர் குவாலியரில் நடந்த முகாமில் பங்கேற்றார். இதில் தேசிய மாணவர் படையின் இணை அதிகாரிக்கான பயிற்சியை பெற்று சிறந்த குழுவிற்கான விருதை பெற்றார். பயிற்சியில் அனைவருக்கும் பதக்கம் வழங்கினர். பயிற்சி பெற்றவர்கள் 8 ஆண்டுகள் தேசிய மாணவர் படையில் லெப்டினன்ட் ஆக பணியாற்றலாம். பின்னர் ஒருமாத பயிற்சி பெற்றால் தலைவர் பொறுப்பை ஏற்கலாம் என்பது குறிப்பிடத் தக்கது.

தினத்தந்தி
18 * 11 * 2014



வாலிபால் போட்டியில் முதலிடம் பெற்ற விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரி மாணவிகள்.

வாலிபால் போட்டியில்

## தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரி வெற்றி

விழுப்புரம், டிச. 6: விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில், கல்லூரிகளுக்கு இடையே வாலிபால் போட்டி நடந்தது. இதில் 10 கல்லூரிகள் கலந்துகொண்டது. இப்போட்டியை தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரி இயக்குனரும், கடலூர் மாவட்ட மகளிர் ஒருங்கிணைப்பாளர் கலந்து கொண்டு போட்டியை துவக்கி வைத்து சிறப்புரையாற்றினார். இதில் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரி முதலிடம் பெற்றது. உளுந்தூர்பேட்டை விநாயகா கலை அறிவியல் கல்லூரி இரண்டாமிடம் பிடித்தது. இதையடுத்து வெற்றி பெற்ற மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது.

தினகரன் 06.12.2014




விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் நடைபெற்ற பேராசிரியர்களுக்கான புத்தாக்க பயிற்சி முகாமில் திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழக கல்வியியல் துறைத் தலைவர் முனைவர் ஆனந்தனுக்கு நினைவுப் பரிசை கல்லூரி இயக்குநர் கஸ்தூரி பாய் தனசேகரன் வழங்கிய போது எடுத்தபடம். உடன் கல்லூரி முதல்வர் அருணாகுமாரி உள்ளார்.

தினமணி 30.12.14



விழுப்புரம் இ.எஸ் செவிலியர் கல்லூரி சார்பில் தமிழ்நாடு தனியார் செவிலியர் கல்லூரி சங்க மாநில நிர்வாகிகளுக்கு தாளாளர் சாமிக்கண்ணு நினைவு பரிசு வழங்கினார். அருகில் செயலாளர் செந்தில்குமார்.

### தெய்வானை அம்மாள் கல்லூரியில்

## செவிலியர் கல்லூரி சங்கத்துக்கு பாராட்டு விழா

விழுப்புரம், ஜன. 12: விழுப்புரம் அடுத்த வி.சாலை இ.எஸ் செவிலியர் கல்லூரி சார்பில் தமிழ்நாடு அங்கீகரிக்கப்பட்ட தனியார் செவிலியர் பயிற்சி பள்ளி மற்றும் கல்லூரி சங்கத்திற்கு பாராட்டு விழா தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் நடந்தது. சங்கத்தலைவர் விவேகானந்தன், செயலாளர் குணசிங் இம்மானுவேல், துணை செயலாளர் ரவிசங்கர், ஒருங்கிணைப்பாளர் சிதம்பரம் ஆகியோர் கலந்து கொண்டனர். ஓபிஆர் நினைவு மருத்துவக்கல்லூரி செயலாளர் செல்வராஜ், நாமக்கல் அரவிந்த் செவிலியர் கல்லூரி நிறுவனர் மணி, ரங்கபூபதி கல்விக்குழும பூபதிப் பிள்ளை, நாகர்கோவில் புனிதசேவியர் கத்தோலிக்க செவிலியர் கல்லூரி தாஸ், இஎஸ் செவிலியர் கல்லூரி முதல்வர் தாமரைச்செல்வி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். இ.எஸ் செவிலியர் கல்லூரி நிறுவனர் சாமிக்கண்ணு, செயலர் செந்தில்குமார் ஆகியோர் பேசினர். விழாவில் செவிலியர் பள்ளி தேர்வாணையம் நடத்திய தேர்வில் மாநிலத்திலேயே 3வது இடம் பிடித்த இ.எஸ் செவிலியர் பள்ளி மாணவி தனத்திற்கு பரிசு வழங்கப்பட்டது. மேலும் அதே கல்லூரியை சேர்ந்த மாணவி தாரிகாவின் பெற்றோருக்கு மருத்துவ காப்பீடு ரூ.1 லட்சம் வழங்கப்பட்டது. இ.எஸ் செவிலியர் கல்லூரி, ஓபிஆர் நினைவு துணை மருத்துவக்கல்லூரி சார்பில் ரூ.1,96,500 நன்கொடை வழங்கப்பட்டது. நிகழ்ச்சியில் தெய்வானை அம்மாள் கல்லூரி இயக்குநர் கஸ்தூரிபாய் தனசேகரன், முதல்வர் அருணா குமாரி, தேர்வு கட்டுப்பாட்டு அலுவலர் நடேசன், துணை முதல்வர் பொற்செல்வி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

தினகரன் 12.1.15




விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் நடைபெற்ற குடியரசு தின விழாவில் உறுதி மொழி ஏற்கும் நிர்வாகிகள்.

தினமணி 27.1.15



விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் தாளாளர் சாமிக்கண்ணு, செயலாளர் செந்தில்குமார் தலைமையில் குடியரசு தின விழா நடைபெற்றது.

தினதந்தி 28.1.15




விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் நடந்த குடியரசு தின விழாவில் உறுதிமொழி எடுத்துக்கொண்டனர்.

## தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் குடியரசு தின விழா

விழுப்புரம், ஜன. 28: விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் குடியரசு தின விழா கொண்டாடப்பட்டது. கல்லூரி முதல்வர் அருணாகுமாரி வரவேற்றார். சிறப்பு விருந்தினர் முனைவர் ரவிக்குமார் கொடி ஏற்றினார். தொடர்ந்து அனைவரும் [illegible] மாணவர்படை மாணவிகளின் அணிவகுப்பு மரியாதையை கல்லூரி தாளாளர் மற்றும் சிறப்பு விருந்தினர்கள் ஏற்றுக் கொண்டனர். கல்லூரி இயக்குனர் முனைவர் கஸ்தூரிபாய் தனசேகரன் அறிமுக உரையாற்றினார். கல்லூரி செயலாளர் செந் [illegible] தாளாளர் சாமிக்கண்ணு முதன்மை உரையாற்றினார். முனைவர் ரவிக்குமார் சிறப்புரையாற்றினார். இதை தொடர்ந்து மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள் நடந்தது. தமிழ்த்துறை மாணவி விஜயலட்சுமி குடியரசு தின செய்திகளை எடுத்துரைத்தார். கணி

தினகரன் 28.1.15




விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் முன்னாள் மாணவிகள் சந்திப்பு [illegible] நடந்தது.

## தெய்வானை அம்மாள் கல்லூரியில் முன்னாள் மாணவிகள் சந்திப்பு

விழுப்புரம், ஜன. 31: விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் முன்னாள் மாணவியர் சந்திப்பு கூட்டம் நடைபெற்றது.

முன்னாள் மாணவிகள் [illegible] வரவேற்றார். கல்லூரி இயக்குனர் முனைவர் கஸ்தூரிபாய் தனசேகரன் அறிமுக உரையாற்றினார்.

முன்னாள் மாணவிகள் ஆங்கிலத்துறை மாணவி காயத்ரி, வணிக மேலாண்மை [illegible]

தினகரன் 31.1.15




விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் [illegible]ல்லூரிகளுக்கு இடையே நடைபெற்ற வாலிபால் போட்டியில் முதலிடத்தை பிடித்த தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரி மாணவிகளுக்கு பரிசு வழங்கப்பட்ட போது [illegible]டுத்தபடம்.

மாலை முரசு 6.2.15

# Nominated to Thiruvalluvar University Academic Council

Special Correspondent

**VILLUPURAM:** The State Government has nominated S. Senthil Kumar, Secretary of the Theivanai Ammal College for Women, Villupuram, as a member of the Academic Council of Thiruvalluvar University, Vellore. In a communication released here Registrar M. Jayakumar has stated that the Pro-Chancellor of the university has nominated Mr Senthil Kumar to the Academic Council for a period of three years from November 5, 2013.


S. Senthil Kumar

Theivanai Ammal College for Women is affiliated to Thiruvalluvar [illegible]

University. Mr Senthil Kumar said that, true to the ideals of founder [illegible] the college has been imparting quality education to [illegible] deprived sections of the society.

He said that the college [illegible]

# கல்லூரி மாணவியர் பேரவை நிறைவு விழா

விழுப்புரம், மார்ச் 18: விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் மாணவியர் பேரவை நிறைவு விழா புதன்கிழமை நடைபெற்றது.

விழாவில் பேரவையின் தலைவி பிரஷாந்தி வரவேற்றார். கல்லூரி முதல்வர் ஏ.கே. அருணாகுமாரி சிறப்பு விருந்தினரை அறிமுகம் செய்து வைத்தார்.

மாணவியர் பேரவையின் 2014-2015-ம் கல்வி ஆண்டின் ஆண்டறிக்கையை பேரவைத் தலைவி பிரஷாந்தி வாசித்தார்.

[illegible] ஆண்டறிக்கை [illegible] பிரசில்லா, அபிராமி, [illegible] வாசித்தனர். விளையாட்டுத் துறை ஆண்டறிக்கையை இலக்கியாவும், என்.சி.சி. ஆண்டறிக்கையை [illegible] வாசித்தனர்.

கல்லூரி இயக்குநர் கஸ்தூரிபாய் தனசேகரன் வாழ்த்துரை வழங்கினார். சிறப்பு விருந்தினராக விழுப்புரம் அறிஞர் அண்ணா கலைக் கல்லூரி முதல்வர் பி.கன்னிகா பங்கேற்றுப் பேசினார்.

பொதுத் தமிழ், ஆங்கிலம், திறன்சார் கல்வி, மதிப்பீட்டுக் கல்வி, துறை சாரா விருப்பப் பாடம், சேவைக்குழுக் கல்வி, முதல் மதிப்பெண் பெற்ற மாணவிகளுக்கு பரிசுகள் சிறப்பு விருந்தினரால் வழங்கப்பட்டன.

வணிகவியல் துறை மாணவி வைஷ்ணவி நன்றி கூறினார்.




மாணவியர் பேரவை நிறைவு விழாவில் சிறப்புரையாற்றுகிறார் அறிஞர் அண்ணா கலைக் கல்லூரியின் முதல்வர் பி.கன்னிகா.

தினமணி 19.3.15

விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில்

# மாணவிகள் பேரவை நிறைவு விழா




விழுப்புரம், மார்ச்.24-

விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் மாணவிகள் பேரவை நிறைவு விழா கல்லூரி இயக்குனர் டாக்டர் கஸ்தூரிபாய் தனசேகரன் தலைமையில் நடைபெற்றது. பேரவை தலைவி பிரஷாந்தி வரவேற்றார். முதல்வர் ஏ.கே. அருணாகுமாரி முன்னிலை வகித்தார். விழாவில் அனைத்து துறை பேரவையின் ஆண்டறிக்கை வாசிக்கப்பட்டது. விழாவில் விழுப்புரம் அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரி முதல்வர் கன்னிகா கலந்து கொண்டு பேசினார். முடிவில் வணிகவியல் துறை மாணவி வை[illegible]ஷ்ணவி நன்றி கூறினார்.

தினத்தந்தி 24.3.15